**வாசிப்பு ஆர்வத்தைக் கருத்திற்கொள்ளல்**
பிடித்த கதாபாத்திரங்கள் பற்றிய கதைகள், பிடித்த தலைப்புகளிலுள்ள கதைகள் வாசிப்பு ஆர்வத்தை ஊக்குவிக்கின்றன. உங்கள் பிள்ளைக்குப் பொருத்தமான புத்தகங்கள், சித்திரக்கதைகள் மற்றும் சஞ்சிகைகளைக் கண்டறிய உதவுங்கள்.




**வாசிப்பின் மகிழ்ச்சியைப் பகிர்தல்**
உங்கள் பிள்ளை வாசித்த புத்தகங்கள் பற்றி அவருடன் கதையுங்கள். இந்த உரையாடல் பொழுதுபோக்காக இருப்பதோடு உங்கள் குழந்தையை வாசிக்கத் தூண்டுகிறது.



**இலத்திரனியல் ஊடகங்களை விவேகத்துடன் பயன்படுத்தல்**
இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்துபவர்களும் வாசிக்கிறார்கள். வாசிப்பு மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் மென்பொருட்களை உங்கள் குழந்தையுடன் தேடுங்கள்.



**நூலகங்களுக்குச் செல்லுதல்**
பொது நூலகங்கள் கவரக்கூடிய பொழுதுபோக்கு இடங்களாக இருப்பதோடு, குழந்தைகளுக்கான பல சலுகைகளையும் வழங்குகின்றன. உங்கள் குழந்தையுடன் உங்களுக்கு அருகிலுள்ள நூலகத்தைக் கண்டுபிடியுங்கள்.



Tamil / Tamoul / Tamil

# என் பிள்ளை வாசிக்கக் கற்றுக் கொள்கிறது

உங்கள் பிள்ளை வாசிக்கக் கற்றுக் கொள்வதில் நீங்கள் இவ்வாறு உதவிசெய்யலாம்.



SIKJM
ISJM
ISMR

### உரையாடுதல்

வளமான நாளாந்த மொழியானது, வாசிக்க கற்றுக் கொள்வதற்கான ஒரு முக்கியமான அடித்தளமாக இருக்கிறது. உங்களுக்கு நன்கு தெரிந்த மொழியில் உங்கள் குழந்தையுடன் உரையாடுங்கள்.



### ஒவ்வொரு குழந்தையும் அவரவர் வேகத்தில்

வாசிக்கக் கற்றுக் கொள்வதற்கு காலம் தேவை, அது சோர்வைத் தரும். இங்கே உங்கள் பிள்ளை மனம் தளராமல் இருப்பதுவும், அதனுடைய முன்னேற்றத்திற்காகப் பாராட்டப்படுவதும் முக்கியம்.



### வாசித்துக் காட்டுதல் ஒரு வரம்

உங்கள் பிள்ளை வாசிக்கக் கற்றுக் கொண்டிருந்தாலும், நீங்கள் அவருக்குக் கிரமமாக வாசித்துக் காட்டுங்கள். அது கதைகள் மீதான அவரது மகிழ்வைத் தக்கவைக்கிறது.



### முன்மாதிரியாக இருத்தல்

பிள்ளைகள் தமக்கு முன்மாதிரியாக உள்ளவர்களைக் கவனிக்கிறார்கள். உங்கள் அன்றாட வாழ்க்கையில் வாசிப்பின் வகிபாகம் என்ன என்பதை உங்கள் பிள்ளைக்குக் காட்டுங்கள்.



விளக்கப்படங்கள்: Patricia Keller

## சுவிஸ் குழந்தைகள் மற்றும் இளையோருக் கான ஊடகங்களின் நிறுவனம் SIKJM/ISJM/ISMR

**SIKJM/ISJM/ISMR** ஆனது சிறுவர் மற்றும் இளையோர் இலக்கியத்திலும், வாசிப்பை ஊக்குவிப்பதிலும் ஈடுபடுகிறது. இது சிறுவர் மற்றும் இளையோரின் மொழி மற்றும் இலக்கியத்தில் ஆர்வத்தைத் தூண்டும் திட்டங்களை நடாத்துவதோடு, துறைசார் வல்லுநர்கள் மற்றும் பெற்றோர்கள் எவ்வாறு பிள்ளைகளின் மொழி வளர்ச்சிக்கும், வாசிக்கக் கற்றுக் கொள்வதற்கும் உதவ முடியும் என்பதற்கு வழிகாட்டுகிறது.

**SIKJM/ISJM/ISMR** இணையதளத்தில் வேறுபட்ட வாசிப்பு ஆர்வங்களைக் கொண்டவர்களுக்குகானதும், வேறுபட்ட வாசிப்பு வயதினருக்குமான பரந்த அளவிலான **ஊடக பரிந்துரைகளைக்** காணலாம். இவை நீங்கள் வாசித்துக் காட்டுவதற்கானவை அல்லது தாமாக வாசிப்பதற்கானவையாகும்.

சுவிஸ் நாடு தழுவிய ரீதியில் **வாசிப்பு நாள்** மற்றும் **கதை சொல்லும் இரவு** ஆகிய நிகழ்வுகள் **SIKJM/ISJM/ISMR** ஆல் வருடத்திற்கு இரு முறை ஏற்பாடு செய்யப்படுவதோடு, அங்கே குழந்தைகள் மற்றும் இளையவர்கள் கதைகள் மீதான அவர்களின் மகிழ்வை ஒன்றாக அனுபவிக்க முடிகிறது.

**மேலதிக தகவல்களுக்கு:**
www.sikjm.ch / www.isjm.ch / www.ismr.ch


SIKJM
ISJM
ISMR

Schweizerisches Institut
für Kinder- und Jugendmedien

Institut suisse
Jeunesse et Médias

Istituto svizzero
Media e Ragazzi